பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

20 09 2025 SATURDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் உற்பத்திக்கான இந்தியா இயக்கம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.
2. பிரதமரின் வங்கிக்கணக்குத் திட்டம், காப்பீட்டுத்திட்டம் உள்ளிட்டவை மக்கள் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
3. கல்விக்கடனை பயன்படுத்தி மாணவர்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.
4. தேர்தல் ஆணையத்திற்கு எதிராக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி தொடர்ந்து தவறான குற்றச்சாட்டுகளை சுமத்தி வருவதாக பிஜேபி குறை கூறியுள்ளது.
5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 413 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் –

<<<<<>>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் உற்பத்திக்கான இந்தியா இயக்கம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், எளிதாக வர்த்தகம் செய்வதற்கும், தொழில்துறை வளர்ச்சிக்கும் உற்பத்திக்கான இந்தியா இயக்கம் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இதன்மூலம் ஒட்டுமொத்த உள்நாட்டு வளர்ச்சி அதிகரிக்கக்கூடும் என்றும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் திட்டங்கள் மூலம் 25 கோடி பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பிரதமரின் பொது வாழ்க்கை குறித்த புத்தகத்தை வெளியிட்டு பேசிய அவர், பிரதமரின் வங்கிக்கணக்குத் திட்டம், காப்பீட்டுத்திட்டம் பொதுமக்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

திரு நரேந்திர மோடியின் தலைமையில் இந்தியா உலகிலேயே நான்காவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு Sanjay Jaju, அரசு திட்டங்களின் பலன்கள் குறித்த தகவல்களை ஆவணப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ரயில் நிலையங்களில் விற்பனை செய்யப்படும் குடிநீர் பாட்டீல் விலை குறைக்கப்பட உள்ளதாக ரயில்வே அறிவித்துள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கையின் பலன்கள் நேரடியாக மக்களுக்கு சென்று சேரும் வகையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு லிட்டர் குடிநீர் பாட்டீல் ஒன்றின் விலை 15 ரூபாயிலிருந்து 14 ரூபாயாக குறைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுநாள் முதல் இந்த விலை குறைப்பு நடைமுறைக்கு வரும் என்றும் ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

கிராமப்புற வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நியாயவிலைக்கடைகளை திறந்துவைத்து அவர் பேசினார்.

கிராமப்புற சாலை மேம்பாடு, சுகாதாரம், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மகளிர் பொருளாதாரத்தை அதிகரிக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு எ வ வேலு கூறினார்.

<<<<<>>>>>>

மாணவர்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைவதற்கான வாய்ப்பாக கல்விக்கடனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் எர்ணாபுரத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், 161 மாணவர்களுக்கு 14 கோடியே 23 லட்சம் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், நாமக்கல் மாவட்டத்தில் 2 ஆயிரம் மாணவர்களுக்கு 50 கோடி ரூபாய் மதிப்பிலான கல்விக்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

முறையாக கடனை திருப்பி செலுத்தும்போது வரி விலக்கு அளிக்கப்படுவதோடு, அபராதமும் இருக்காது என்பதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>>

தேர்தல் ஆணையத்திற்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி சுமத்தி வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைக்கு நாட்டு மக்கள் அனைவரும் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்து வருவதாக கூறினார்.

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ஆரோக்கியமான பெண்கள்-வலுவான குடும்பம் இயக்கத்தின் கீழ், நாடுமுழுவதும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் நடைபெறும் இந்த முகாம்களில் மகளிருக்கான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – விஜயகுமார் – 35 Sec.)*

இந்த பரிசோதனைகள் தங்களுக்கு பெரிதும் பயன் அளிக்கும் வகையில் அமைந்திருந்ததாக இந்த மருத்துவ முகாமில் பங்கேற்ற பயனாளிகள் தெரிவித்தனர்.

*(Voice Byte – பயனாளிகள் – 31 Sec.)*

<<<<<>>>>>>

தமிழகத்தில் அடுத்த மூன்று தினங்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், அடுத்த 24 மணிநேரத்தில் நீலகிரி, ஈரோடு, செங்கல்பட்டு, உள்ளிட்ட எட்டு மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

*(Voice Byte – செந்தாமரை கண்ணன் - 51 Sec. )*

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் வட்டம் படப்பையில் புதிய காவல் நிலையத்தை மாநில அமைச்சர் திரு தா மோ அன்பசரன் இன்று திறந்துவைத்தார்.

-----------------

மயிலாடுதுறை மாவட்டம் திருவிழந்தூரில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற ரத்த தான முகாமில் ஏராளமானோர் பங்கேற்று ரத்த தானம் செய்தனர்.

-------------

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை வட்டத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் ஆட்சியர் திருமதி அருணா, கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து பெட்டகங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளை வழங்கினார்.

--------------

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா அஞ்சல் துறை சார்பில் தூய்மை இந்தியா இயக்க விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-----------

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பராமரிப்பு தொடர்பான முகாமை ஆட்சியர் திரு கமல்கிஷோர் தொடங்கிவைத்தார்.

-----------------

கன்னியாகுமரியில் சர்வதேச கடற்கரை தூய்மை தின நிகழ்ச்சி ஆட்சியர் திருமதி அழகுமீனா தலைமையில் நடைபெற்றது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 413 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 47 புள்ளி ஐந்து ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 412 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய இந்தியா சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்பிற்கு 96 ரன் எடுத்துள்ளது.

--------

சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – ரித்விக் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<>>>>>>